தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 29, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024

1993 மார்ச் 12, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு''

மிக்க பொருள்வளம் உடையதாய், எல்லோராலும் விரும்பத் தக்கதாய், கேடு இல்லாததாய், மிகுதியாய் விளைபொருள் தரு வதே நாடு ஆகும். (குறுக்கீடு).

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

உறுப்பினர்கள் விடுதியில் உறுப்பினர் ஒருவர் தாக்கப் பெற்றது பற்றிய உரிமைப் பிரச்சினை குறித்து.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே, ...(குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் காலையிலே சட்டப்பேரவை விடுதிக்கு முன்னாலே நடைபெற்ற சம்பவம் குறித்து இங்கே உரிமை மீறல் பிரச்சினை பல உறுப்பினர்கள் கொண்டுவந்து இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள், உரிமை மீறல் பிரச்சினை கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல் கிறீர்கள். அதைப்பற்றி நானே சொல்லிவிடுகிறேன். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் சிலரால் தாக்கப்பட்டதாக ஒரு உரிமை மீறல் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்கு இன்று காலை 9-41 மணியளவில் கொடுத்திருக்கிறார். இது சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் நடந்த பிரச்சினை என்கிற முறையில்,

இப்படிப்பட்ட விரும்பத்தகாத சம்பவம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் நடந்ததாக செய்தி கேள்விப்படுகிறபோது பெரிதும் வருத்தமாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கு உரிய ஏற்பாடு செய்து இருக்கிறேன். இந்த விவரம் கேள்விப்பட்ட உடனேயே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. நடந்து இருப்பதாகத் தெரிவிக்கிற இந்தச் சம்பவத்துக்கு பேரவைத் தலைவர் என்கிற முறையில் மீண்டும் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப வேண்டுமென்று இன்றைக்கு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறீர்கள். அதை இப்போது எழுப்புவது என்பது நம்முடைய விதிமுறைகளின் படியும் மரபுகள்படியும் இயலாத ஒரு காரியம் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள் (குறுக்கீடு).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே, ஏற்கனவே, முன்பு எழுப்பி இருக்கிறார்கள்; இன்றைய சீப் மினிஸ்டர் எழுப்பி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, எழுப்பி இருப்பது என்பது வேறு; பேரவைத் தலைவர் அனுமதித்து இருப்பது என்பது வேறு. எனவே, அந்த அளவுக்கு அனுமதிக்க முடியாத நிலைமையிலே இருக்கின்ற காரணத்தினாலேதான், திங்கட்கிழமை எடுத்துக் கொள்வதாகத் தெரிவித்து இருக்கிறேன். திங்கட்கிழமை இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடந்த சம்பவத்துக்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கிற நேரத்தில், உறுப்பினர்களுடைய பாதுகாப்புக்கு முழு உத்திரவாதம் இந்தப் பேரவையின் மூலம் அனைவருக்கும் தருகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இப்பொழுது இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம்; திங்கட்கிழமை எழுப்ப உங்களுக்கு அனுமதி அளித்து இருக்கிறேன். (குறுக்கீடு) திங்கட்கிழமை எழுப்பலாம். (குறுக்கீடு) இங்கே முன்பு எழுப்பப்பட்ட போதும் அனுமதி மறுத்து இருக்கிறார்கள் (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டு பேசி இருக்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது தாங்கள் எழுப்பியதைப்போல. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) தங்களையும் நான் அனுமதித்தேன். (குறுக்கீடுகள்)

நீங்கள் சொன்னதற்கு நானும் பதில் சொல்லி இருக்கிறேன். இந்தப் பிரச்சினையை திங்கட்கிழமை எழுப்பலாம். (குறுக் கீடுகள்) தயவுசெய்து இப்போது வேண்டாம். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : முன்பு இதேபோல் எழுப்பப்பட்டு இருக்கிறது. அந்த மரபை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இப்போது வேண்டாம். (குறுக்கீடுகள்) தங்களைப் பேச அனுமதித்தேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சட்டசபையில் உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை எழுப்ப அனுமதிக்காதது, சபை உறுப்பினர்களுடைய உரிமையை நீங்கள் அங்கீகரிக்காததாகும். சபை உறுப்பினர்களின் உரிமைகளுக்கும், அவர்களுடைய பாதுகாப்பிற்கும் நீங்கள்தான்—you are the custodian of the House. நீங்கள் ஒரு சபை உறுப்பினருடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய இடத்திலே இருக் கிறீர்கள். இந்த சபை உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய இடத்திலே நீங்கள் இருக்கிறீர்கள். சபை உறுப் பினருடைய உரிமைகள் மீறப்படுகிற நேரத்தில், அதுவும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தொடங்குகிற நாளில், சட்டப்பேரவையில் கலந்து கொள்வதற்காக வருகின்ற ஓர் உறுப்பினரைப் பார்த்து நீ அசெம்பிளியிலே... (குறுக் கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தயவுசெய்து அதற்குள்ளே போக வேண்டாம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். பிரச் சினையைத் தாங்களும் எழுப்ப நான் அனுமதித்து, என் னுடைய முடிவையும் அறிவித்து இருக்கிறேன். இதற்குமேல் விவாதம் வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : முன்னுதாரணம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, முன்னுதாரணம் இல்லை. அனுமதிக்காமல் இருந்ததற்குத்தான் முன்னுதாரணம் இருக்கிறது. (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: இதே அவையில் முன்பிருந்த எங்கள் துணைத் தலைவர் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்போல தங்களையும் இப்போது அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) இல்லை, இது வரையிலே இருந்த பேரவைத் தலைவர்கள் அதை எடுக்க முடியாது என்றுதான் முடிவு சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உரிமை மீறல் பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

முற்பகல் 10–05

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: உறுப்பினருடைய பாதுகாப்பு பற்றிய பிரச்சினை. இது அனுமதிக்கப்பட வேண்டும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாதுகாப்பிற்கு முழு உத்தரவாதம் பேரவைத் தலைவர் என்கிற முறையில் தருகிறேன். (குறுக்கீடுகள்) காவல் துறையினரிடமிருந்து நான் உடனடியாக அறிக்கைகள் கேட்டு வாங்கி இருக்கிறேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து கேளுங்கள். உங்கள் பாதுகாப்பிற்கு துளிகூட நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) முழுப் பாதுகாப்பு உண்டு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தில் சிலர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களைத் தாக்க முயற்சி செய்ததாகத் தகவல் வந்திருக்கிறது.

திரு. ப. ரங்கநாதன்: தாக்கி விட்டார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: தாக்கப்பட்டதை அவை உறுப்பினர்கள் பார்த்து இருக்கிறார்கள். உங்கள் கட்சி உறுப்பினர்களே பார்த்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: காவல் துறை தகவல் எனக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் ஒருவர் சுதாகோபால் என்று அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் யார் என்ற விவரம் இதுவரையில் கிடைக்கவில்லை. என்னிடத்தில் இல்லை. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் ஏற்கனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தெரிவித்தபடி உறுப்பினர்களுக்கு தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். இனிமேல் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறா

வண்ணம் எல்லா ஏற்பாடுகளும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993–94 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) உரிமைப் பிரச்சினை பற்றி தயவு செய்து மேலும் வேண்டாம். திங்கட்கிழமை இதை நான் எடுக்க இருக்கிறேன். (குறுக்கீடுகள்) உரிமை மீறல் பிரச்சினை—விதி 220—'No tice of a motion to raise a question of privilege together with a brief Statement shall be given atleast one hour before the Commencement of the sitting....' (குறுக்கீடுகள்.) எனக்கு 9–41 மணிக்குத்தான் அந்த உரிமை மீறல் பிரச்சினை வந்தது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து என்னுடைய கவனத்திற்கு வந்ததை நான் சொல்கிறேன். இன்றைக்கு எடுக்க இயலாது. (குறுக்கீடுகள்) இதுவரையில் கடைப்பிடித்து வந்த மரபுகள்படி இன்றைக்கு அதை எடுக்க இயலாது. (குறுக்கீடுகள்) நடந்த சம்பவத்திற்கு நானே முழுப் பொறுப்பு எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கிறேன் என்று தெரிவித்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்தப் பிரச்சினையில் இப்படி புகார் வந்திருக்கிறது; ஒரு குறிப்பிட்ட நபர் பற்றி தகவல் வந்திருக்கிறது; நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசின் சார்பில் அறிவித்து இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இந்த அளவுக்கு இந்தப் பிரச்சினையில் போயிருக்கிறபோது, உரிமைப் பிரச்சினை என்பது தான் இங்கே மிச்சம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) உறுப்பினர்களுடைய பாதுகாப்பு என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழு உத்தரவாதம் இப்போது தெரிவித்து இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உரிமைப் பிரச்சினையை விதிமுறைகளின்படி தான் எடுக்க முடியும்.

Thiru S. PETER ALPHONSE : Speaker Sir, please allow me to speak.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உங்கள் சார்பில் தான் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். அவரும் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) அதை திங்கட்கிழமை நான் அவரிடத்தில் கேட்டுக் கொள்வேன். தயவுசெய்து இப்போது வேண்டாம். (குறுக்கீடுகள்) இன்று பிரச்சினையை எழுப்ப அனுமதித்து இருக்கிறோம். அனுமதித்து, உங்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் பதிலும் அளித்து இருக்கிறார். உரிமைப் பிரச்சினை என்பதை மட்டும் திங்கட்கிழமை எடுத்துக்கொள்

கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை எழுப்பவே அனுமதிக்க முடியாது என்று இங்கே சொல்லவில்லை. தங்களை எழுப்ப அனுமதித்து (குறுக்கீடுகள்) தாங்கள் எழுப்பியதற்குப் பின்னர் நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) காவல் துறையினருக்கும் அவர் புகார் கொடுத்திருக்கிறார். காவல் துறையினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு காவல் துறையினருக்கு புகார் கொடுத்திருக்கிறார். காவல் துறையினர் தகுந்த நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) முதலமைச்சர் அவர்களும் அதற்கு உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். ஆகவே உரிமைப் பிரச்சினையை திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்.)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர் பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகே வந்து நின்றனர்.)

முற்பகல் 10–10

உரிமைப் பிரச்சினை என்பதைத்தான் நான் சொல்கிறேன். உறுப்பினர்களுடைய பாதுகாப்பைப் பற்றி உங்களுக்கு எழுப்ப அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) ஆளுநருடைய அறிவிப்புக்கு இணங்க இந்த நேரத்திலே நாம் நிதிநிலை அறிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, அதற்கு இடையூறு செய்ய வேண்டாம். (குறுக்கீடுகள்) உரிமைப் பிரச்சினை திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்படும். உறுப்பினர்களுடைய பாதுகாப்பு பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழு உத்தரவாதம் வழங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சரே சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உரிமைப் பிரச்சினையை திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப் போகிறேன். இந்தப் பிரச்சினையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்ப அனுமதித்து, எதிர்க்கட்சித் தலைவரும் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இங்கே நின்று கொண்டிருக்கிற உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைக்குச் செல்ல வேண்டும். உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். உங்களுடைய இருக்கைக்குச் செல்ல வேண்டும். (குறுக்கீடுகள்.) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்), விதிமுறைகளுக்கு முற்றிலும் புறம்பானது. (குறுக்கீடுகள்) விதிமுறைகளுக்கு முற்றிலும் புறம்பான செயல். (குறுக்கீடுகள்.) உறுப்பினர்கள், 5, 6 பேர், என்னுடைய இருக்கைக்கு வந்து சப்தம் இடுவது என்பது எந்த விதிமுறைகளின் கீழே வருகிறது? (குறுக்கீடுகள்) விதிமுறைகளுக்கு முற்றிலும் புறம்பான காரியங்களில் உறுப்பினர்கள் பீட்டர் அல்போன்ஸ், ஞானசேகரன், செல்வராஜ், ரங்கநாதன் ஈடுபடுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உறுப்பினர் ரங்கநாதன், உங்களுடைய இருப்பிடத்திற்குச் செல்ல வேண்டும்.

1993 மார்ச் 12] [பேரவைத் தலைவர்]

உங்களுடைய இருக்கைக்குச் செல்ல வேண்டும். செல்வராஜ் (குறுக்கீடுகள்) நீங்கள் உரிமைப் பிரச்சினையை விதிமுறைகளின்படி ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) 9-41-க்குக் கொடுத்து இருக்கிறீர்கள். அதையும் நான் திங்கட்கிழமை எடுத்துக் கொள்வதாக உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திங்கட்கிழமை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன். பிரச்சினையை எழுப்ப எதிர்க்கட்சித் தலைவரை அனுமதித்தேன். அவர்களும் பிரச்சினையை எழுப்பி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். இது விவாதத்திற்கு உரிய பொருள் அல்ல. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உங்கள் இருக்கைக்குச் செல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை என்று சொன்னால், நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) இருக்கைக்குச் செல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) இந்த முறையிலே நீங்கள் நடந்து கொள்கிறபோது, நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) பீட்டர் அல்போன்ஸ், ரங்கநாதன் ஞானசேகரன், செல்வராஜ் உடனடியாக அவையை விட்டு வெளியேறக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) மார்ஷல், ரங்கநாதன், பீட்டர் அல்போன்ஸ், ஞானசேகரன், செல்வராஜ் ஆகிய நால்வரையும் அவையை விட்டு வெளியேற்ற வேண்டும். (குறுக்கீடுகள்) அவர்களை அப்புறப்படுத்தவும். (குறுக்கீடுகள்.)

(திருவாளர்கள் பீட்டர் அல்போன்ஸ், ரங்கநாதன் ஞானசேகரன், செல்வராஜ் ஆகியோர் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே அமர்ந்தனர்.)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பாதிக்கப்பட்டவர்களை வெளியேற்றுவதுதான் ஜனநாயகமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அவையை நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்) பாதிக்கப்பட்டவர்கள் சார்பில், எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் கிளப்பியிருக்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் அவையை நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்)

(திருவாளர்கள் பீட்டர் அல்போன்ஸ், ரங்கநாதன், ஞானசேகரன், செல்வராஜ் ஆகியோர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இதற்கு முன்னுதாரணமே கிடையாதா, சபையிலே, மரபே கிடையாதா சபையிலே. (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னுதாரணங்களின்படி, மரபுகளின்படி அவை நடத்தப்படுகிறது. (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நீங்கள் முன்னுதாரணத்தையும் பின்பற்றவில்லை, மரபையும் பின்பற்றவில்லை. முன்னுதாரணத்தைச் சொல்லி ஆகிவிட்டது. மரபை நாங்கள் சுட்டிக்காட்டியாகிவிட்டது. இருந்தும் நீங்கள் பின்பற்றமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அமர வேண்டும். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அமர வேண்டும். (குறுக்கீடுகள்.)

வரவு-செலவுத் திட்டம், 1993-94 அளித்தல். 1993-94 ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவுத் திட்டம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்). வரவு-செலவுத் திட்ட குறிப்பேடுகளை உறுப்பினர்களுக்கு வழங்கலாம். (குறுக்கீடுகள்) தங்களைப் பேச அனுமதித்து அதற்கு முதல் அமைச்சரும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மீறி இந்தப் பேரவையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேரவையின் நடவடிக்கைக்குக் குந்தகம் ஏற்படுத்தக் கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்.)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்னால் வந்து குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்.)

தயவுசெய்து உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கையில் அமர வேண்டும். அவரவர்கள் இருக்கையில் அமர வேண்டும். (குறுக்கீடுகள்) அவரவர்கள் இருக்கையில் அமர வேண்டும். (குறுக்கீடுகள்) உரிமை மீறல் பிரச்சினையை நான் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடு.)

முற்பகல் 10-15

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அதுவரையில் நாங்கள் உயிரோடு இருப்பதற்கு என்ன உத்தரவாதம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதற்கு முதலமைச்சர் அவர்கள் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என்று பேரவைக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்.) உறுப்பினர்களுக்கு முழுப் பாதுகாப்பு உள்ளது. உறுப்பினர்களுடைய பாதுகாப்பைப்பற்றி யாரும் கவலைப்படவேண்டியது இல்லை. (குறுக்கீடு.) நிதியமைச்சர்.

1993 மார்ச் 12]

2. வரவு–செலவுத் திட்டம், 1993-94—அளித்தல்—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும் 1993–94 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலைப் பெறும் பொருட்டுப் பேரவையின் ஆய்வுக்கு வைப்பதில் நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

" இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு."

இனிய சொற்களைக் கூறி, வேண்டுவோர்க்கு வேண்டிய பொருள்களைச் கொடுத்து, அவர்களையெல்லாம் காப்பாற்ற வல்ல நாடாள்பவருக்கு, அவரது செல்வாக்காலேயே இவ்வுலக மானது, அவர் கருதுகின்ற அளவுக்கு, அவருக்கு மிகவும் கட்டுப் பட்டு நடக்கும் என்பது வள்ளுவப் பெருந்தகையார் வழங்கிய பொன் மொழியாகும்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: எங்கள் உரிமை பாதிக்கப்படுவதால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ச. இராமச் சந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஜி. பழனி சாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வே. தம்புசாமி, மற்றும் திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் வெளி யேறினர்.)

2. வரவு—செலவுத் திட்டம், 1993-94—அளித்தல்
—(தொடர்ச்சி).

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: இத்தகைய நற்பண்புகளைக் கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கை, குறிக்கோள், சனநாயக நெறிமுறைகள் ஆகியவற்றைப் பின்பற்றி, பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நெறிப்படுத்திக் காட்டிய மனித வள மேம்பாட்டுப் பணிகளை ஏற்று நடை முறைப்படுத்தி வருவதில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.